**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.பி.எண்.79/2021 அதன் அ.வ.எண்.67/1992**

1) ஜானகி ... 1 ம் மனுதாரர்/வாதி
2) தனபால் .... 2 ம் மனுதாரர்

/எதிர்/

ராஜா முத்தையா .... எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி

(இம்மனுவில் இ.ஏ.எண்.2/2021 ல் கடந்த 28.11.2022 ம் தேதி பிறந்த உத்தரவின் படி 2 ம் எதிர்மனுதாரர் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்)
(இம்மனுவானது இ.ஏ.எண்.3/2023 ல் கடந்த 03.06.2023 ம் தேதி பிறந்த உத்தரவின் படி சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இந்த மனுவானது 15.10.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.ஜவஹர்லால் அவர்கள் ஆஜராகியும், எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1). நிறைவேற்றுதல் மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 32–ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்</u>**

மனுவில் எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம், செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் அ.வ.எண்.67/1992 என்ற வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது விசாரணைக்கு பின்பு 26.09.2003 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து 1 ம்மனுதாரர்/வாதி மாண்புமிகு சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்த ஏ.எஸ்.எண்.2/2004 ஆனது 28.06.2004 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மேல்முறையீட்டை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீடான S.A.(MD) No.161/2008 ஆனது கடந்த 31.08.2020 ம் தேதி 1 ம் மனுதாரருக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டது என்றும், அதன் பின்னர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட Special Leave to Appeal (Civil) Nos.15674/2020 and 1206/2021 ஆனது கடந்த 08.09.2021 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என கூறப்பட்டுள்ளது.

2.2) எனவே, மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையானது 2 ம் மேல்முறையீட்டில் பிறப்பித்த தீர்ப்பாணையின் அடிப்படையில் நிறைவேறுதல் மனு 2 வது தபசில் கண்டதும், பிராது வரைபடத்தில் C E F B என காண்பிக்கப்பட்டுள்ளதுமான (தீர்ப்பானை 2 ம் தபசில்) சொத்தை எதிர்மனுதாரர் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி 1 ம் மனுதாரர்

வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3) **<u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் கூடுதல் எதிருரையின் சுருக்கம்</u>**

3.1) எதிர்மனுதாரர் தனது எதிருரையில் 2 வது அயிட்டச் சொத்து நிலத்தில் சரியாக இருப்பதாக விளக்கவில்லை என்றும், 2 வது அயிட்டச் சொத்தில் ஆக்கிரமிப்பை சரியாக குறிப்பிடவில்லை என்றும், மனுதாரர் முழுச் சொத்தையும் அளந்து ஆக்கிரமிப்பு நிலத்தை குறிப்பிட்டு கண்டறிய எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் தனது எதிருரையில் வெளிப்படையாக ஒத்துக் கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற அனைத்தையும் மறுக்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தீர்ப்பாணையானது மாற்றப்படவில்லை என்றும், மேற்படி தீர்ப்பாணையானது நிறைவேற்ற முடியாது என்றும், எனவே, இந்த நிறைவேற்றுகை மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5) மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் தாக்கல் செய்த அசல் வழக்கானது விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மாண்புமிகு சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றும், அங்கும் மேற்படி மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், அதன் பின்னர் மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த S.A(MD) No.161/2008 ஆனது அனுமதிக்கப்பட்டது என்றும், அதன் பின்னர் எதிர்மனுதாரர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த Special Leave to Appeal (Civil)

Nos.15674/2020 and 1206/2021 ஆனது 08.09.2021ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும் வாதிடப்பட்டது.

5.1) மேலும், தனது வாதத்தில் நிறைவேற்றுகை மனுவானது 22.09.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி நிறைவேற்றுகை மனு நிலுவையில் இருக்கும் போது கடந்த 15.11.2021ம் தேதி 1ம் மனுதாரர், 2ம் மனுதாரருக்கு தபசில் சொத்தை பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் இந்த நிறைவேற்றுகை மனு நிலுவையில் உள்ளது பற்றியும், மேற்படி நிறைவேற்றுகை மனுவில் 2ம் மனுதாரரை, 1ம் மனுதாரர் இடத்தில் இருந்து தொடர்ந்து நடத்திக் கொள்ள 1ம் மனுதாரரால் சம்மதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

5.2) எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 2ம் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவை தாக்கல் செய்ய முடியாது என்றும், நிறைவேற்றுகை மனு தபசில் சொத்தை ஸ்தலத்தில் கண்டறிய முடியாது என்றும், மனுதாரர்கள் தரப்பில் அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 15.11.2021ம் தேதி நிறைவேற்றுகை மனு நடவடிக்கை நிலுவையில் இருக்கும் போது செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 16 மற்றும் சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 3ஐ மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது.

5.3) உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 146 ன்படி தீர்ப்பாணை மாற்றம் செய்யப்பட்டவர் தான் நிறைவேற்றுகை மனுவை நடத்த முடியும் என்றும், இங்கு தீர்ப்பாணையானது செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலமோ அல்லது அசைன்மெண்ட் மூலமோ மாற்றப்படவில்லை என்றும்,

நிறைவேற்றுகை மனுவில் காலம் 6a ல் முறையாக திருத்தம் செய்யப்படவில்லை என்றும், தீர்ப்பாணையானது மாற்றம் செய்யப்பட்டு விட்டதாக சொல்வது பொய்யானது என்றும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய முன் தீர்ப்பான CA.No.18278/2017 Vaishno Devi Construction Rep.Thr. Sole Proprietor (D) thr.Lrs. And Anr –vs– Union of India ஐ மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது. இந்த நிறைவேற்றுகை மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென வாதிடப்பட்டது.

6). **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

7). இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது எதிர்மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.67/1992 தாக்கல் செய்யப்பட்டு, 26.09.2003 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து மனுதாரர்/வாதி மாண்புமிகு சார்பு நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்த மேல்முறையீடான ஏ.எஸ்.எண்.2/2004 ம் 28.06.2004 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

7.1) மேற்படி மேல்முறையீட்டை எதிர்த்து 1ம் மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீடான S.A.(MD) No.161/2008 ஆனது கடந்த 31.08.2020 ம் தேதி 1ம் மனுதாரருக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டது என்றும், அதன் பின்னர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட Special Leave to Appeal (Civil) Nos.15674/2020 and 1206/2021 ஆனது கடந்த 08.09.2021 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளதை எதிர்மனுதாரர் மறுக்கவில்லை.

7.2) அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த Special Leave to Appeal (Civil) No.15674/2020 கடந்த 08.09.2021ம் தேதி "We see no reason to interfere. The Special Leave Petitions are dismissed." எனக் கூறப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் 1ம் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவை இந்நீதிமன்றத்தில் 22.09.2021ம் தேதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிறைவேற்றுகை மனு நிலுவையில் இருக்கும் போது 1ம் மனுதாரர், நிறைவேற்றுகை மனுவில் கண்ட தபசில் சொத்துக்களை 2ம் மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண்.8243/2021 மூலம் கடந்த 15.11.2021ம் தேதி இணை சார்பதிவாளர், பாளையங்கோட்டை மூலம் கொடுத்துள்ளார் என்பதை செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலை பார்வையிடுகையில் அறிய முடிகிறது.

7.3) எதிர்மனுதாரர் தரப்பில் செட்டில்மெண்ட் ஆவணத்தை மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என வாதிடப்பட்டதை பரிசீலனை செய்கையில், 2ம் மனுதாரர் இந்த மனுவில் தன்னை தரப்பினராக சேர்த்துக் கொள்ள தாக்கல் செய்த உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 146ன் கீழான மனுவானது தாக்கல் செய்யப்படும் போது, செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலானது மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்படி மனுவானது இ.ஏ.எண்.2/2022 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு, அதன் பின்னர் 2ம் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்பது மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

7.4) மனு தபசில் சொத்துக்களை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்த பின்னர், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் இந்த நிறைவேற்றுகை மனு எண்ணை குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. **<u>மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் " ராஜா முத்தையா மீது (எதிர்மனுதாரர்) நான்</u>**

**<u>தாக்கல் செய்துள்ள நிறைவேறுதல் மனுவில்</u>, "<u>என்னிடத்தில் நீ கட்சியாக இருந்து தொடர்ந்து நடத்தி அனுபவம் பெற்றுக் கொள்ளவும். இவ்விதம் நான் என் முழு மன சம்மதத்துடன் உனக்கு இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுத்திருப்பதால் இதனை மாற்றவோ, மறுக்கவோ, ரத்து செய்யவோ எனக்கு உரிமை கிடையாது</u>.**" எனக் கூறப்பட்டுள்ளது.

7.5) மேற்படி சங்கதியை பரிசீலனை செய்கையில், 2ம் மனுதாரருக்கு நிறைவேற்றுகை மனு தபசில் கண்ட சொத்தானது 1ம் மனுதாரர் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது. மேலும், தீர்ப்பாணையை நிறைவேற்ற தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவையும் 1ம் மனுதாரர் இடத்தில் இருந்து, 2ம் மனுதாரர் மேல் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலானது ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மீண்டும் தனியாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. 2ம் மனுதாரருக்கு தீர்ப்பாணையானது நிறைவேற்றுவதற்காக மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான உரிமையும் தபசில் சொத்தில் இல்லை. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வாதுரை குறிப்புகளில் உள்ள சங்கதிகள் ஏற்றுக் கொள்ளும் படியாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7.6) எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டிய மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த CA.No.18278/2017 Vaishno Devi Construction Rep.Thr. Sole Proprietor (D) thr.Lrs. And Anr –vs– Union of India முன் தீர்ப்பின் சங்கதிகள் இந்த மனுவின் சங்கதிகளுக்கு பொருந்தவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர், நிறைவேற்றுகை மனுவில் கண்ட சொத்தை ஸ்தலத்தில் அடையாளம் கண்டறிய முடியாது என குறிப்பிட்டுள்ளதை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை

பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையானது 2வது மேல்முறையீட்டில் எவ்வளவு இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

8) இந்நிலையில், மேற்படி மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றமானது அசல் வழக்கை இறுதியாக தீர்மானித்து விட்ட பின்னர் தான் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) நிறைவேற்றுகை மனுவானது 2021ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Civil Appeal No.3640 – 3642 /2025ல் Periyammal (Dead) Through Lrs and Ors –vs– V.Rajamani & Anr.–ல் பிறப்பித்த உத்தரவிற்கிணங்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ROC.No.21393–B/2025/B5/Statistics பிறப்பித்த வழிகாட்டுதலுக்கு இணங்க நிறைவேற்றுகை மனுவை 6 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

10) மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு இணங்கவும், மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீடான S.A.(MD) No.161/2008 ஆனது 1ம் மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பித்த தீர்ப்பாணைக்கு இணங்க மனு தபசில் சொத்தினை 2ம் மனுதாரரருக்கு மீட்டுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது. அவ்வாறு நிறைவேறுதல் மனு 2வது தபசில் கண்டதும், பிராது வரைபடத்தில் C E F B என காண்பிக்கப்பட்டுள்ள இடம் இதன் அளவு கிழமேல் 75 அடி, தென்வடல் கீழ்தலை 16' 6" மேல்தலை 18' (தீர்ப்பானை 2ம் தபசில்) சொத்தை எதிர்மனுதாரர் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி 2ம் மனுதாரரிடம் ஒப்படைவு செய்து கொடுப்பது தான்

நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை இந்த உத்தரவின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

***இறுதியில், இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.*** **Delivery Batta in 3 days. Delivery on or before 28.10.2025** *Call on 29.10.2025.*

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
order uploaded on 17.10.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.17 17:12:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : இல்லை
2). எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
order uploaded on 17.10.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.17 17:12:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.79/2021
அதன்
அ.வ.எண்.67/1992
வரைவு/சீரான உத்தரவு
நாள் – 17.10.2025